**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.223/2024 - PW-7**

| | |
|---|---|
| Name | திரு.சிவநேஷ்வர் (எ) சிவநேசன் |
| Husband/Father Name | முருகானந்தம் |
| Village /Area | ஜோதி நகர் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | கணக்காளர் |
| Age | 27 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 05.03.2026.

**(எதிரி 2 ஆஜர். எதிரி 1 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். எனது தம்பி கண்ணன் அவருக்கு 2024ம் ஆண்டு அடிப்பட்டது. நான் அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு சென்று அவரை பார்த்தேன். போலீசார் எனது தம்பிக்கு அடிப்பட்ட விவரத்தை கேட்டு விசாரித்தார்கள். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை –**

20.06.2024 அன்று நானும் அரக்கோணம் ஜோதி நகரை சேர்ந்த எனது நண்பர் சதீஷும் அரக்கோணம் ராம்கோ மேம்பாலத்தின் அடியிலிருந்த போது அரக்கோணம் நகர காவல் ஆய்வாளர் பகல் 11 மணிக்கு எதிரி மணிகண்டன் (எ) குட்ட மணியை கைது செய்து விசாரித்து கொண்டிருந்ததாகவும் அவர் எந்த விதமான வற்புறுத்தலுமின்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையிலும் சாட்சி சதீஷ் முன்னிலையிலும் பதிவு செய்ததாகவும் மேற்படி ஒப்புதல்

வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி மண்கண்டன் தன்னிடமிருந்த கத்தியை அடையாளம் காட்டி எங்கள் முன் ஆஜர் படுத்தியதை கைபற்றுதல் மகஜரில் கைப்பற்றி கொண்டதாகவும் மேற்படி ஆவணங்களில் நானும் சதீஷும் சாட்சி கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

போலீசார் என்னிடம் மருத்துவமனையில் வைத்து தான் கையொப்பம் வாங்கினார்கள். நான் கையொப்பம் இட்ட தாளில் விவரங்கள் எழுதப்பட்டிருந்ததா இல்லையா என்பதை நான் பார்க்கவில்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.03.05 18:26:46 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.